Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (25 - 01 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 341

Mr. Koohsmoran

## "பொம்மருக்கும் பங்கர் அங்கருக்கும் பங்கர்"

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கலைக் கண்டித்து நேற்று இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குகொண்ட பெருந்தொகையான மக்களால் பெரும் கோஷங்கள் எழுப்பப்பட்டன; அவ்வாறு எழுப்பப்பட்ட கோஷங்களில் சில வருமாறு:- "பதுக்காதே பதுக்காதே' மண்ணெண்ணையைப் பதுக்காதே!" "சுரண்டாதே சுரண்டாதே மக்களைச் சுரண்டாதே!" "பொம்மருக்கும் பங்கர் அங்கருக்கும் பங்கரா?" "பொருளாதாரத் தடையை உடைத்தெறிவோம்!" "கலப்படம் உனக்கென்ன கைவந்த கலையா?" "அறுக்காதே அறுக்காதே கழுத்தை அறுக்காதே!" "தேநீருக்குச் சீனி இல்லை கசிப்புக்குத்தான் சீனியா?" போன்ற கோஷங்கள் நேற்று பல்கலைக்கழகத் (4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட

# பதுக்கலுக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருள்களை பதுக்கல், கள்ளச்சந்தை வியாபாரம், விலைவாசி உயர்வு, அரசின் பொருளாதாரத் தடை போன்றவற்றிற்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று யாழ். நகர்ப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை பத்துமணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மிகவும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டுமைல் நீளமான இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் பொருளாதாரத் தடைக்கெதிராகவும், பதுக்கல், கொள்ளை லாபமீட்டுதல் போன்றவற்றிற்கெதிராகவும் பலத்த ஆர்ப்பாட்டம் செய்து கோஷங்களை எழுப்பினர்.

அத்தியாவசியப் பொருள்கள் பதுக்குவதைத் தடுக்கும்படியும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும்படியும் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோரிடம் ஊர்வலத்தின் முடிவில் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரில் பொருளாதாரத்தடையை நீக்கவும், (4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய - இலங்கை ஒப்பந்தம் காலம் கடந்த ஒன்று

- ரஞ்சன்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் கைச்சாத்தான 1987ஆம் ஆண்டு உடன்பாடு காலங்கடந்ததொன்றாகும். இந்தியவெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா தெரிவிக்கும் கருத்துகள் எதுவாயினும் அவை கவனத்திற் கொள்ளப்படும் என்று பாதுகாப்பு

ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.

இனப்பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வொன்றைஏற்படுத்த எந்தவொரு விஷயம் குறித்தும் திறந்த மனத்துடன் கலந்தாலோசிக்கக் கொழும்பு

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில்

## வீரவணக்கம்

### மேஜர் மக்கன்ரோ

மேஜர் மக்கன்ரோ நேற்று ஆனைவிழுந்தானில் இடம் பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

சதாசிவம் புலேந்திரன் என்ற இயற்பெயரை கொண்ட மேஜர் மக்கன்ரோவுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்து கொள்கின்றனர்.

மக்கன்ரோவின் சகோதரன் 1989ஆம் ஆண்டு

# வளைகுடா நிலைமை

★ இஸ்ரேல்மீது நான்காவது தடவையாக ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. ஆனால் சேத விபரங்கள் குறித்து இதுவரை எதுவித தகவலும் வெளியிடப்படவில்லை. ஆனால் ஹைபா துறைமுகத்தில் குறைந்தது ஒரு ஏவுகணையாவது விழுந்திருக்கலாம் என இஸ்ரேலிய வானொலி அறிவித்தது.

★ சவூதி அரேபியாவின் வடமத்திய பகுதியிலும் றியாட் மற்றும் டகரானிலும் ஸ்கட் ஏவுகணைகள் ஏககாலத்தில் விழுந்து தாக்கியதாக அமெரிக்கா அறிவித்தது.

★ அமெரிக்காவின் பெற்றியாட் எதிர்ப்பு ஏவுகணைகள் ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகளில் நான்கினை வானிலேயே வழிமறித்து அழித்தன என்றும், மற்றைய ஒன்று நிலத்தில் வெடித்தது என்றும் அமெரிக்கா தெரிவித்தது.

★ இஸ்ரேல்மீது நடத்தப்பட்ட புதிய ஏவுகணைத் தாக்குதலுக்கு உடனடியாக பதிலடி தரப்போவதில்லை என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். இன்னும் பல ஸ்கட் ஏவுகணைகள் ஈராக்கிடம் இருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர் ஈராக்கை நாம் தேர்ந்தெடுக்கும் ஒரு தருணத்தில் தான் தாக்கப்போவதாக தெரிவித்தார்.

★ சவூதி அரேபியாவில் ஈராக்கிய தாக்குதல் வெற்றி கண்டிருப்பதாக பாக்தாத் வானொலி தெரிவித்தது. அத்துடன் சவூதி அரேபியாவின் பிராந்தியத்தில் ஈராக்கிய குழுப்புகள் இப்போதும் இருப்பதாக பாக்தாத் வானொலி தெரிவித்தது

★ வளைகுடாப் பகுதியில் எட்டாவது நாளாக நடைபெற்றுவரும் தாக்குதலை அடுத்து இஸ்ரேல் நான்கு தடவைகள் ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது என்றும் ஆதலால் இஸ்ரேலுக்கு மனிதாபிமான அடிப்படையில் 16 கோடியே 60 லட்சம் டொலர் உதவியினை வழங்கப் போவதாக ஜேர்மனி அறிவித்துள்ளது

★ ஈராக்கை அழிக்க அமெரிக்கா முயற்சி செய்கிறது என மலேசியா குற்றம் சாட்டியுள்ளது. நேசப்படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரம் குறித்து தகவல்களை அமெரிக்கா தணிக்கை செய்து வருகிறது என்றும் மலேசியப் பிரதமர் மகாதீர் மொகமட் தெரிவித்துள்ளார்

★ ஈராக்கின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக விடுக்கப்படும் சவால்களை ஏற்றுக்கொள்ள முடியாது என சிரியா அறிவித்துள்ளது

★ ஈராக்கிற்கு நாம் எதிர்பார்த்த சேதம் ஏற்படவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்

★ ஜெர்மனி 28 ஈராக்கிய ராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

★ ஈராக் நீண்ட யுத்தத்துக்குத் தயாராக உள்ளது என்று ஈராக் தூதுவர் டில்லியில் தெரிவித்துள்ளார்.

★ ஈராக்கிலிருந்து ஜோர்டானுக்கு புகலிடம் தேடிச்சென்ற 60 இந்தியப் பிரஜைகளைக் காணவில்லை என்று ரயில்வேத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில்

# நிறைவேற்றாத அம்சங்கள்பற்றி சுக்ளாவுடன் ஆராயப்படும்

(கொழும்பு)

இந்திய - இலங்கை உடன்படிக்கையில் இதுவரை நிறைவேற்றாது இருக்கும் அம்சங்கள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்ளாவோடு ஆராயப்போவதாக வெளியுறவு அமைச்சர் ஹேரத் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய ஹேரத் 28ஆம் திகதி இலங்கை வரவிருக்கும் இந்திய வெளியுறவு

(4ஆம் பக்கம் பார்க்க)

கலந்தாலோசிக்கக் கொழும்பு தயாராகவுள்ளது என்றும் அமைச்சர் நேற்றுச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

தேயிலை மற்றும்வர்த்தகம் தொடர்பான இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்தும் வி. சி. சுக்ளாவின் மூன்றுநாள் விஜயத்தின்போது ஆலோசிக்கப்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

1989ஆம் ஆண்டு வவுனியா நகர்ப்பகுதியில் தேசவிரோத சக்திகளால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். இவர் விடுதலைப்புலிகளுடன் தற்போது இணைந்து கொண்டுள்ள ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவராவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

... அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ அல்ஜீரியா, மொறக்கோ, தியூனிசியா, சிரியா, மொரட்டேனியா ஆகிய நாடுகள் பாரசீக வளைகுடாவில் யுத்த நிறுத்தத்தைக் கோரியுள்ளன.

★ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதற்கான முயற்சிகள் மேற்குறிப்பிட்ட ஐந்து நாடுகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ துறைமுக நகரமான பஸ்ரா உட்பட தென்ஈராக்கின் பல்வேறு நகரங்கள்மீது நேச நாட்டுப் படைகள் விமானத் தாக்குதல்களை நேற்றும் மூர்க்கத்தனமாக நடத்தின; அடர்த்தியான மேகமூட்டம் காரணமாக தடைப்பட்டிருந்த விமானத் தாக்குதல் நேற்று மீண்டும் உக்கிரமாயிற்று

★ றோயல் சவூதி விமானப்படையினர் தன்னம்பிக்கையோடும், துணிச்சலோடும் தாக்குதல் நடத்தப் புறப்பட்டனர். இவர்களது விமானங்களுக்கு வானவெளியிலேயே எரிபொருள் நிரப்பப்பட்டது: நேசநாட்டுப் படைகளால் 10,000க்கும் மேற்பட்ட தடவைகள் ஈராக்மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டன.

★ குவைத்தின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக நேசநாட்டுப் படைகளுடன் 20 குவைத் விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

★ "உலகம் உறக்கத்திலிருந்தபோது எம்மீது நடத்தப்பட்ட தாக்குதலால் நாம் அதிர்ச்சியடைந்தோம்" என குவைத்திலிருந்து முன்னர் தப்பியோடிய விமானி ஒருவர் கூறியுள்ளார்.

★ வளைகுடா யுத்தம் இரண்டாவது வாரத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் பன்னாட்டுப் படைகள் 12,000 தடவைகள் தாக்குதலை மேற்கொள்வதற்காகப் பறந்துள்ளன.

★ உலகின் முதலாவது எலெக்ரோனிக் யுத்த முறையை அமெரிக்கா வளைகுடாவில் நடத்தி வருவதாக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ அமெரிக்காவிற்கு ஆதரவாக வளைகுடாவில் செயற்படும் சிறிய அரபு நாடுகள் தாக்கப்படும் என ஈராக் எச்சரிக்கை செய்துள்ளது.

# நோயாளர் 28ஆம் திகதி கொழும்பு செல்ல ஏற்பாடு

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளை ஏற்றிச் செல்லும் கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட் கிழமை புறப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட நோயாளிகள் மூன்றுநாட்களுக்குப் போதுமான உணவு, நீர், மருந்து பாவிப்பவர்களானால் ஒரு கிழமைக்கு தேவையான மருந்து வகைகளுடனும் திங்கட் கிழமை காலை 6 30 மணிக்கு யாழ். போதனா

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிலமணி நேரம் ஆனையிறவில் புலிகள் இராணுவம் மோதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்கினர். சிலமணிநேரம் நீடித்த கடும் சண்டையின் பின்னர் இராணுவத்தினர் முகாம் திரும்பினர் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

# எதிரிக்கு சொர்ப்பனமான மேஜர் மக்கன்ரோ

1984ஆம் ஆண்டு காலகட்டத்தில் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மக்கன்ரோ, எதிரிக்கு என்றும் சிம்மசொர்ப்பனமாக இருந்தவர் என விடுதலைப்புலிகளின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது

மேலும் அச்செய்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் தனது திறமையை வெளிப்படுத்திய மக்கன்ரோ இந்தியப் படைகளுக்கு எதிராக பலசண்டைகளை தலைமைதாங்கி வழிநடாத்தினார். எதற்கும் துணிந்த விடாமுயற்சியுள்ள இவரது இயல்பால் பல வெற்றிகளை எமதுஇயக்கம் பெற்றிருக்கிறது.

நம் ஆயுதங்களைப் பெற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வளைகுடா பயணத்திற்கு ஓர் ஆலோசனை

பெல்ஜியத்தில் வெளிவரும் பத்திரிகை ஒன்று புதுமையான போட்டி ஒன்றையும் பரிசையும் அறிவித்துள்ளது. வளைகுடா நெருக்கடி தீரக்கூடிய பொருத்தமான ஆலோசனைகளை எதிர்பார்த்துப் போட்டி மூன்

(4ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தை தொடர்பாக

# பிரேமதாசாவின் நிபந்தனைகள் நெகிழக் கூடியவையாம்

- பேராசிரியர் பீற்றர் சார்க்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் பிரகடனம்செய்தயுத்தஓய்வைதொடர்ந்து புலிகளுடன் இணக்கம் ஒன்றைக் காண அரசாங்கம் முன்வைத்த நிபந்தனைகள் நெகிழும் தன்மையானவை. எல்லாப் பிரச்சினைகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடியவை என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகர் தன்னிடம் கொழும்பில் தெரிவித்ததாக சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சார்க் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேம

(4ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச செஞ்சிலுவை சங்க லொறிகள்மீது ஹெலி சூடு

(வவுனியா)

வவுனியாவிலிருந்து மடு அகதிமுகாமுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை கொண்டுசென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு லொறிகள் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. லொறிகள் இரண்டும் சேதமுற்றன.

கடந்த 21ஆம் திகதி பகல் 11மணியளவில் வவுனியா நகரிலிருந்து சென்றுகொண்டிருந்த இந்த லொறிகளுக்கே சிறிலங்கா ஹெலிகொப்டர்கள் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் :
23 - 05 - 1929

மறைவு :
26 - 12 - 1990

திதி:
25 – 01 – 1991

### அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை

அந்த நாள் அம்மா முன்போன பின்பு
அப்பா உள்ளாரென்று ஆறுதலடைந்திருக்க
அந்தரமாகவே எங்களைத் தவிக்கவிட்டு விட்டு
எங்கு சென்றீரப்பா ஏங்கித் தவிக்கின்றோம்?
அக்காமேல் பாசம் அளவற்றிருந்தாலும்
மக்களுள்ளார்களென மறந்தீர்களா அப்பா?
திக்குத் திசைதெரியாமல் திண்டாடும் எங்களை
நிர்க்கதியாய் விட்டு மாமியிடம் போனீர்களா?

புன்னாலைக்கட்டுன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

பிரிவால் துயருறும்
மக்கள் சத்திவேல், சர்மா

(B/1926)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தமிழ்த் தாயின் மடியில்
1963 ❋ 10 ❋ 18

அராஜகப் படையின் பிடியில்
1990 ❋ 08 ❋ 25

### ந. முத்துராணி (ரமணி)

(3 ஆம் வருட நுண்கலைப் பீட மாணவி)

அரச படையின் அட்டூழியத்தில்
அநியாயமாக அழிக்கப்பட்டாயோ?
அடிமைத் தனத்தின் அடக்குமுறைக்கு
அகப்பட்ட முத்துராணியே!
அரை ஆண்டு சென்றிடினும்
அல்லும் பகலும் உன் நினைவுகளே எம்மை
அண்டிச் செல்கிறது!
அழுது புலம்பி உனைக்கேட்கிறோம்


**வரிவிளம்பரம்**

**தரன் ஸ்ருடியோ**

றபர்சில், கலர் - கறுப்பு வெள்ளை - பாஸ்போட் அடையாள அட்டை, என்லாஜ்மென்ட் படங்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, வாழ் வீதி, (ரெட்டா வீதி) யாழ்ப்பாணம்.
(B/1915)

**கிளீன் கட்**

தமிழ், ஆங்கில ரைப்பிங், றோனியோ வேலைகளுக்கும், அடையாள அட்டைகளைக் கவரிட்டுக் கொள்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற்பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கும்: கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B/1921)

**மில்க்வைற் திரவ சவர்க்காரம்**
**(Milk White Liguid Soap)**

எவ்வித அழுக்கையும் அகற்றும் சக்தி கொண்டது. வீட்டுச் சலவைக்கு சிறந்தது. போத்தல் ரூ. 90/- அரைப் போத்தல் ரூ 45/- மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ். நவீன சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது.
(B/1927) -மில்க்வைற்

**SecondHandBook House**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செப்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (B-1855)


## தவில் மேதைக்கு கலைமாமணி பட்டம்

(சென்னை)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவில் வித்துவான் கணேசபிள்ளைக்கு தமிழக இயல் இசை நாடக மன்றம் "கலைமாமணி" பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இவ் விருதைச் கலைஞர் மு. கருணாநிதி வழங்கிக் கௌரவித்தார்.

## பாதிப்பில்லையாம்

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தில் இலங்கையர்எவரும் இதுவரை பாதிப்புக்குள்ளாகவில்லை என்று கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொதுக்கூட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் இளைஞர் சங்கம் மனோன்மணி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 27 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


**போட்டோஸ்ரற்**

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளை புகைப் படங்களுக்கும் நாடுங்கள்;

**சித்ராலயா**

351, கோயில் வீதி,
நல்லூர்.
(கோயில் பின்வீதியில்,
சம்பன் கோட்டமுன்பாக)

(B-1928)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரமோதூத வருடம் தைத்திங்கள் 13 ஆம் திகதி
(26 - 01 - 1991) சனிக்கிழமை காலை 7 - 51 மணிமுதல்
9 - 23 மணிவரையுமுள்ள சுபவேளையில்

| | |
|---|---|
| கல்வியங்காடு திரு சின்னராஜா அவர்களின் புத்திரன் திருவளர் செல்வன் **ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ)** அவர்களுக்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி **சத்தியாதேவி** அவர்களுக்கும் |

கலட்டி அம்மன் ஆலயத்தில் திருமணம செய்யத் திருவருள்பாலித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராராய் வருகை தந்து
மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| திரு. திருமதி ஐ சின்னராஜா<br>விளையாட்டரங்க வீதி,<br>கல்வியங்காடு,<br>யாழ்ப்பாணம். | திரு. திருமதி க. இராஜேந்திரம்<br>(வைரமுத்து)<br>46 கலட்டி அம்மன் வீதி,<br>யாழ்ப்பாணம். |

வரவேற்பாளர்கள்: இ. யசோதரன், இ. ராஜேஸ்வரன், இ. கிரிதரன்

(R/1049)


பொது மக்களின் நலன்கருதி
மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது

**வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை**

வைத்திய நிபுணர்களின் ஆலோசனை


## நினைவு கூருகின்றோம்!

### ஜனவரி 25

1986ஆம் ஆண்டு நாவற்குழி முகாமைச்சேர்ந்த
ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான

அரை ஆண்டு சென்றிடினும்
அல்லும் பகலும் உன் நினைவுகளே எமை
அண்டிச் செல்கிறது!
அழுது புலம்பி உனைத்தேடுகிறோம்
அன்னைத் தமிழின் அரவணைப்பில்
அமைதி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட நுண்கலைப்பீட
மாணவர்கள்.

(B-1905)

---

வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும், ஆய்வு கூட மருத்துவப்பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ஆம் திகதி முதல் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன் வந்துள்ளது.

இப்படிக்கு
நிர்வாகம்.

17, கண்டி றோட்,
சுண்டிக்குளி

(B/1929)

---

1986ஆம் ஆண்டு நாவற்குழி முகாமைச்சேர்ந்த
ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான
மோதலில் வீரமரணமடைந்த

**விஜோத், ராஜன்** (யோ. செல்வகுமார் - மட்டுவில்)

**அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

கழுத்தில் நஞ்சும் உண்டு
கைகளில் துவக்கும் உண்டு
முழுக்கத் துணிவு கொண்டு
முடிக்கும் வெற்றி என்று
எழுத்தில் அடங்கா வீரம்
எதற்கும் அஞ்சாத் திரம்
அழுத்த மான கொள்கை
அதிலே தளப்பம் இல்லை
இனியும் என்ன தயக்கம்
இணையும் புலிகள் உடனே
குனிந்து குறுகி நீயும்
கொடுத்த பிச்சை யோடு
மனித னென்று வாழ்ந்து
மகிழ எண்ண வேண்டாம்
மலையே அசைந்த போதும்
மனமே கலங்க மாட்டோம்
விலைகள் எங்கள் உயிர்கள்
விடுதலைக் காகக் கொடுப்போம்
தொலைவில் இல்லைத் தேசம்
தோன்றும் நாளை நம்பும்!

**- விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-1895)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்:
19 - 10 - 1978

ஆண்டவனடியில்:
12 - 12 - 1990

## இரவீந்திரநாத் யலந்திரா
(யா/ மண்டைதீவு மகா வித்தியாலயம் 7-ம் ஆண்டு மாணவன்)

மண்டைதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த இரவீந்திரநாத் கமலாதேவி தம்பதிகளின் அன்புச் செல்வன் யலந்திராவின் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டியும் இன்று (25 01.1991) வெள்ளிக் கிழமை நடைபெறும்.

மண்டைதீவு - 5
தாய், சகோதரன்.

(B/1924)

---

# Personal Classes
**B. M. C. முருகலேன், JAFFNA.**

## A/L 91 புதிய பிரிவு ஆரம்பம்
**27. 01. 1991 ஞாயிறு**
**காலை 7-30**

- Physics — திரு. சத்தியசிலன்
- Chemistry — திரு. செல்வா
- Zoology — திரு. ஈஸ்வரதாசன்
- Botany — திரு. பாலா
- Pure / Applied — திரு. கலைநேசன்

**A/L 90 Paper & Day Classes**
**A/L 92 Weekend Classes**
**நடைபெறுகின்றன.**

— விபரங்கள் நேரில் —

(B-1901)

★ சிந்தனைக்கு ★

பிறரை ஏமாற்றத் துணிந்து முனைகிறோம்;
நமக்கே, சிலந்தி வலையைப் பின்னி விடுகிறோம்.
—ஸர் வால்ட்டர் ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 25-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

## கள்ளச் சந்தையின் சவால்

தமிழரின் உரிமைப் போராட்டத்தை இராணுவ பலம் கொண்டு அடக்க முடியாத நிலையில், பல்வேறு வழிமுறைகளை யோசித்து இறுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் தமிழர் பிரதேசம் மீதான பொருளாதாரத்தடை மிக முக்கியமானதாகும்.

இப் பொருளாதாரத்தடையின் காரணமாக வழமையான பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு இராணுவ நடவடிக்கையினால் மேலும் பாதிப்புக்கள் ஏற்பட்டு மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது ஜீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்ந்த மக்கள் முன்னரே வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்தவர்கள். இன்று இவர்கள் பெரும் இன்னல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இலக்கும் அது தான், மக்களுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதன் மூலம் அவர்களைப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கச் செய்வதும் அதன் மூலம் போராட்டத்தை பலவீனப்படுத்தி தமிழரை வெற்றி கொள்ளுதலே நோக்கமாகும்.

இவ்வாறான சிறிலங்கா பேரினவாத அரசாங்கத்தின் எண்ணத்தை இன்று பூர்த்தி செய்வதில் வடபகுதி வர்த்தகர்களும் முன்னின்று செயற்படுமாப் போல் தெரிகின்றது.

இன்று வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு என்றுமில்லாதவாறு தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தப் பொருள்களின் தட்டுப்பாடு இயற்கையானதல்ல. செயற்கையாக வர்த்தகர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகும்.

வடக்கு கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த பின்னரும் பொருளாதாரத் தடையை அமுல் செய்த பின்னரும் பொருள்களின் வரவு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது என்னவோ உண்மை தான்.

கடந்த யுத்தத்தின் போது வடபகுதி வியாபாரிகள்

# அரசாங்கம் தேர்தல் நடத்தத் தயார்
# சூழ்நிலை தான் சுமுகமாக இல்லை

(கொழும்பு)
"வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் அங்கு சூழ்நிலை தான் சுமுகமாக இல்லை" என சிறிலங்காவின் பொதுநிர்வாக உள்ளூராட்சித்துறை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மாகாணசபைகள் தொடர்பான ஒத்தி வைப்பு விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசிய பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டிருந்தன.

### பெஸ்டஸ் பெரேரா

இதற்கு பதில் அளிக்குமுகமாகப் பேசிய பெஸ்டஸ் பெரேரா வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்காது தேர்தல் நடத்த வேண்டும் எனக் கேட்டால் அதில் நியாயமுண்டு எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையும் அங்கு உருவாக வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

## கொள்ளையர்கள் வகையாகச் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)
யாழ்நகரின் நாவாந்துறையை அண்டிய பகுதியில் இரவு நேரத்தில் வீடுகளில் ரீ.வி, சைக்கிள்கள், கூறைச் சேலைகள் உட்பட பலலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்ற கோஷ்டி ஒன்று கடந்த செவ்வாய் இரவு தனியார் பாதுகாப்புச் சேவையினரிடம் வகையாக மாட்டிக் கொண்டது.

திருடர்கள் கோஷ்டி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணை தொடர்கிறது.

## ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ்வும் வவுனியா நகரில் நடமாட்டம்

(வவுனியா)
வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ். போன்ற குழுக்களின் உறுப்பினர்களும் நடமாடித் திரிவதாக அறியப்படுகிறது.

மேற்படி உறுப்பினர்கள் குழுக்களாக இல்லாமல் காவல் சோதனையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருடன் தனித்தனியாக செயல்படுவதாக மேலும் அறியப்படுகிறது.

ஏற்கனவே வவுனியா நகரப் பகுதியில் நடமாடித்திரியும் புளொட் குழுவினருடன் குறிப்பிட்ட குழுக்களின் உறுப்பினர்கள் இணைந்திருப்பதாகவும் அறியப்படுகிறது. (தி)

## பட்டப்பகலில் வழிப்பறி

(யாழ்ப்பாணம்)
வங்கியில் 500/- ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு தனியே வந்து கொண்டிருந்த கல்வியங்காட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவரிடம் ஆரியகுள சந்திக்கு அண்மையிலுள்ள ரயில் பாதைக்கு அருகாமையில் பகல் 11.00 மணியளவில் சைக்கிளில் வந்த 28 வயது மதிக்கத்தக்க திருடன் "வங்கியில எடுத்த பணத்தைக் கொடு" என வெருட்டி பணத்துடன் மணிக்கூட்டையும் பறித்துக் கொண்டானாம். பின்னர் மணிக்கூட்டை மட்டும் கொடுத்துவிட்டு பணத்துடன் ஓடி மறைந்துவிட்டான்.

இச்சம்பவவேளை வீதியில் சன நடமாட்டம் இருந்தும் சத்தம் போடாதபடி காரியத்தை கச்சிதமாய் திருடன் முடித்திருக்கின்றான்.

இதேபோன்று கடந்த திங்களன்று இரவு இதேயிடத்தில் ஒரு செய்தியாளர் திருடர்களிடம் தனது சைக்கிளைப் பறி கொடுத்துள்ளார்.

## வரலாற்றுப் புரட்டுக்களை மாணவர்மீது திணிக்கக்கூடாது

### ப. கணபதிப்பிள்ளை

(யாழ்ப்பாணம்)
பாடப்புத்தகங்களில் உள்ள வரலாற்றுப் புரட்டுக்களை அப்படியே மாணவர்களிடம் திணிப்பதற்கு ஆசிரியர்கள் முயற்சிக்கக் கூடாது. இனவெறி ஆட்சியாளர்களால் வெளியிடப்படும் இப் புத்தகங்கள் அவர்களது நோக்கங்களுக்கு ஏற்றமாதிரிப் வரலாற்றைத் திரிபுபடுத்திக் கூறுகின்றன. ஆகவே ஆசிரியர்கள் உண்மை வரலாற்றை மாணவர்களுக்குக் கூற வேண்டும். அதன் மூலம் தமிழர்களுடைய தொல்லியற் பெருமை, அவர்கள் இந்த நாட்டை ஆண்டவர்கள் என்ற உண்மை மாணவர்களுக்குத் தெரியவரும்.

இவ்வாறு கடந்த 17 ஆம் திகதியன்று (வியாழன்) நயன்மார்கட்டு சனசமூக நிலையத்தினைத் திறந்து வைத்து உரையாற்றிய நல்லூர் வடடாரக் கல்வி அதிகாரி லெப். கேணல் சந்தோஷத்தின் தந்தையாருமான திரு ப. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் ந. இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் பகீன் உட்பட பலர் உரையாற்றினார்கள். 'இந்த மண் எங்களின் சொந்தமண்' புகழ் சாந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சி உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கடந்த யுத்தத்தின் போது வடபகுதி வியாபாரிகள் கள்ளச் சந்தை வியாபாரத்தில் நன்கு தேர்ச்சி அடைந்து விட்டார்கள். பல இடங்களில் களஞ்சியங்களை ஏற்படுத்துதல் சந்தையில் உயர்விலையை பேணக் கூடியதாக மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் பொருள்களை சந்தையில் விடுதல் போன்றவற்றில் நன்கு அனுபவம் பெற்று விட்டார்கள்.

யுத்த நிறுத்த முறிவு, வளைகுடாப் பிரச்சினை என்பவற்றுடன் ஆரம்பித்த பதுக்கல் நடவடிக்கையானது அத்தியாவசியப் பொருள்களின் விலை நிர்ணயத்துடன் முற்றாக பாதிப்படைந்து விட்டது. இன்று அத்தியாவசியப் பொருள்கள் எவையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை நிலவுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை நிர்ணயம் வியாபாரிகளுக்கு பெரும் கேடு எதை விளைவித்து விட்டது? வியாபாரிகள் பாதிக்கப்படும் அளவிற்கு விலை நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை. முதலாளிகளின் மூலதனம், சொத்து, அவர்களின் அபாய நிலை, கால விரயம் போன்ற சகலவற்றிற்கும் சேர்த்தே விலை நிர்ணயம்செய்யப்பட்டுள்ளது இதன்காரணமாகவே விலை நிர்ணயம் செய்யப்பட்ட பொருள்கள் சிலவற்றின் விலை உண்மையான விலையை விட இரண்டு மடங்கிற்கு அதிகமாகவும் சிலவற்றின் விலை மூன்று மடங்கு அளவிலும் உயர்ந்ததாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இவ்விலை நிர்ணயம் முதலாளிகளுக்கு எந்தவித நட்டத்தையும் ஏற்படுத்தாததோடு அவர்களுக்கு சாதாரண காலத்தில் கிடைக்கும் லாபத்தை விட உயர்ந்தளவு லாபம் பெறுவதற்கு உத்தரவாதம் கொடுக்கின்றது.

இந்த நிலையில் வியாபாரிகளின் பதுக்கல் நோக்கமானது திட்டவட்டமாகக் கொள்ளை லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதாகும். கொள்ளை லாபம் நோக்கம் கொண்ட இப்பதுக்கல் நடவடிக்கையானது வர்த்தகர்களால் மக்களுக்கு விடுக்கப்பட்ட ஒருசவாலாகும். இன்னும் தெளிவாகக் குறிப்பிடின் இது விடுதலைப் போராட்டத்திற்கே விடுக்கப்பட்ட எச்சரிக்கையுமாகும்.

டம் தனது சைக்கிளைப் பறி கொடுத்துள்ளார்.

## ஒரு படைபலி பலர் காயம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஓர் இராணுவ வீரர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. அதே வேளை கட்டுவனிலும் பல இராணுவத்தினர் காயமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அகதி முகாமில் வயிற்றோட்டம்

(மல்லாகம்)

மல்லாகம் கனிஷ்டவித்தியாசாலை அகதி முகாமில் தங்கியிருந்த ராமதேவன் (வயது 69) என்பவர் வயிற்றோட்டத்தினால் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம்முகாமில் இதற்கு முன்னரும் பலர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## புதிய மாணவர் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பெப்ரவரி மாதம்5 ஆம் திகதி புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். (மு)

களுக்குத் தெரியவரும்.

நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## யாழ். அரச அதிபராக தொடர்ந்து இருக்கவே விரும்புகின்றேன்

### -அன்ரன் அல்பிரட்

(கொழும்பு)

தற்போதைய யாழ். அரசாங்க அதிபருக்கு அரசு வழங்கிய பதவி உயர்வை அவர் மறுத்துள்ளதுடன் தான் தொடர்ந்தும் யாழ். அரசாங்க அதிபராகவே இருக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் அண்மையில் கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் துணை அமைச்சு ஒன்றின் செயலாளராக பணியாற்றும்படி கேட்கப்பட்ட போது அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துள்ளார்.

இந்த விடயம்பற்றி அவர் கருத்து வெளியிடுகையில் தான் கல்வியாலும், அனுபவத்தினாலும் இலங்கை நிர்வாக சேவையின் பத்தாவது இடத்தில் இருப்பதாகவும் ஆனால் தன்னிலும்விட அனுபவத்திலும் கல்வியிலும் தரம் குறைந்தவர்கள் பலர் அமைச்சுக்களின் செயலாளராகப் பதவி வகிக்கின்றனர். எனக்கு தற்பொழுது அமைச்சு ஒன்றின் செயலாளராகப் பதவி வகிக்கக்கூடிய அனுபவமும், திறமையும் இருக்கும்போது துணை அமைச்சின் செயலாளர் பதவியை தனக்குத் தரும் பொழுது தான் அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று கூறினார்.

இதனால் தற்போதைய நிலையில் தான் தொடர்ந்தும் யாழ். மாவட்டத்துக்கான அரசாங்க அதிபராகவே சேவையாற்றப்போவதாகவும் அவர் கூறினார். (க)

தெங்கு, பனம்பொருள்

## கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள்

(ஊர்காவற்றுறை

இந்த வருடத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் வெளியிட்டுள்ளது.

இச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. க. இராமச்சந்திரன் இத்திட்டம் பற்றி தமது நிருபரிடம் தெரிவிக்கையில் உப உணவு உற்பத்தி, மகளிர் குழுக்கள் மூலம் பனைசார் கைத்தொழில்களை உருவாக்குதல் போன்றவற்றில் சங்கம் முழுமையாக ஈடுபடுமென்று வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் எமது 'சங்கம்' இணைந்து செயற்படுமென்றும் தெரிவித்தார். (15)

# அ.தி.மு.க. உறுப்பினர் தடை நீக்க இந்திரா காங்கிரஸ் பகிஷ்கரிப்பு

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது விதிக்கப்பட்ட தடைஉத்தரவை நீக்கும்வரை தமது கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டப் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள மாட்டார்கள் என இந்திரா காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தமிழக சட்டசபையில் ஏற்பட்ட அடிதடியைத் தொடர்ந்து சட்டப் பேரவைத் தலைவர் தமிழ்க் குடிமகன் அ. தி. மு. காவை தற்போதைய கூட்டத்தொடரிலும், வரவு செலவுத்திட்ட கூட்டத்தொடரிலும் கலந்து கொள்ளக்கூடாது என்று தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

நேற்று சட்டப்பேரவை கூடியபோது அ. தி. மு. க. மீது விதிக்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு இந்திரா காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் குமரி அனந்தன் சட்டப்பேரவைத் துணைத் தலைவரை கேட்டார்.

ஆனால் துணைத் தலைவர் வி. பி. துரைசாமி அந்த வேண்டுகோளை மறுக்கவே வெளிநடப்புச் செய்த இந்திரா காங்கிரஸினர் மேற்கண்ட அறிவித்தலை விடுத்தனர்.

அதேவேளை தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்று முன்தினம் நடந்த சம்பவத்திற்கு அ. தி. மு. க. வருத்தம் தெரிவிப்பதாக இருந்தால் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யலாம் எனத் தெரிவித்தார்.

# பதுக்கலை முறியடிக்க புதிய நடவடிக்கைகள்

## வர்த்தகர் சங்கத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

அறிமுகப் படுத்தப்பட்ட நியாயமான கட்டுப்பாட்டு விலைக்கு எதிராக பதுக்கல்களில் ஈடுபடும் வர்த்தகர்களை முறியடிக்க நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். வர்த்தகர் சங்க தலைவர் க. வி குவரட்ணம் நேற்றுத் தெரிவித்தார்.

வடபகுதி வர்த்தகர்கள் அத்தியாவசிய பொருள்களை பதுக்குவது சம்பந்தமாக நேற்றுநடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தையும் கண்டனக்கூட்டத்தையும் தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் தக்கசமயத்தில் நடைபெற்றதையிட்டு தாம் மகிழ்ச்சி அடைவதுடன் வரவேற்பதாகவும் கூறினார்.

கட்டுப்பாட்டுவிலை போடப்பட்டமை குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் எமது வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சம்பாதிக்கமுற்பட்ட சமயம் நாம் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பது பற்றி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியுடன் கலந்தாலோசிக்க முன்னர் பொதுவாக அனைத்து வர்த்தகர்களுக்கும் கட்டுப்பாட்டு விலை சம்பந்தமாக ஒரு அறிவுறுத்தல்கொடுத்திருந்தோம்.

இந்த அறிவுறுத்தலை கேட்டவுடன் கூடிய விலைகளுக்கு பொருள்களை வாங்கிய வர்த்தகர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தமது பொருள்களை விற்க குறிப்பிட்ட ஒரு கால எல்லை கேட்டிருந்தால் அதற்கு நாம் உடன்பட்டிருப்போம் ஆனால் இந்த வர்த்தகர்கள் எமக்கு சவால்விட்டிருப்பதுபோல பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவது மக்களுக்குச் செய்யும் துரோக செயலாகும் எனவும் அவர் யாழ். வர்த்தகர்களை கண்டித்தார் (லோ)

---

நிறைவேற்றாத

அமைச்சருடன் பேசப் போகும் விடயம் குறித்துத் தெரிவித்தார்.

இந்திய-இலங்கை உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை நிறைவேற்றப்படாத அம்சங்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவித்தார்.

---

பதுக்கலுக்கு எதிராக

---

பிரேமதாசாவின்

தாசா புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான மனப் பக்குவத்துடன் இருக்கிறார் என்றும் பேராசிரியர் சார்க் தெரிவித்தார்.

ஆயுதங்களைக் கீழே வைத்தல் என்று அரசாங்கம் விதித்த முன்நிபந்தனை பல பொருள்படும் என்று கருத்துத் தெரிவித்த பேராசிரியர் சார்க், ஆயுதங்களைக்கீழே வைப்பது என்ற வரையறை நிச்சயமற்றது என்றும், ஆயுதங்களைக் கீழே வைப்பதாகப் புலிகள் தரப்பில் கொள்கையளவில் தெரிவிக்கப்பட்டால் போதுமானதென்றும், தமிழரின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டதும் காலப்போக்கில் ஆயுதங்க

---

# ஈராக்கிய ஸ்கட் ஏவுகணைகள் பெரும் சவாலாக உள்ளன

## - ஜெனரல் கொலின் பவல்

(றியாட்)

வளைகுடாப் போரில் அமெரிக்க தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் கவனம் இப்போது ஈராக்கின் தரைப்படை மீது திரும்பியுள்ளது. ஈராக்கின் தென் பகுதியையும், குவைத்தையும் தாக்குவதற்காக கணிசமான எண்ணிக்கையில் தரைப்படைகளை திரட்டுவதில் நேசதேசப் படைகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க முப்படைத் தளபதி ஜெனரல் கொலின் பவல் தெரிவித்தார்.

ஆயினும், இப்போதைய வான் தாக்குதலின் நோக்கம் நிறைவேறிய பின்புதான் தரையில் பெரியளவிலான சண்டை நடைபெறும் என்று சவூதிஅரேபியாவிலுள்ள அமெரிக்க நேசதேச இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பன்னாட்டுப் படைகளுக்குத் தற்போது பெரும் சவாலாக இருப்பது ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகள் தான் என்று ஜெனரல் பவல் கூறினார். ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் திரும்பத் திரும்ப இடம்பெறுவதால் பன்னாட்டுப் படைகள் தமது மதிப்பு மிக்க மனித சக்தியை, இந்த ஸ்கட் ஏவுகணைகளைத் தேடி அழிக்கும் பணியில் ஈடுபடுத்த வேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது என்று அமெரிக்காவின் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

---

# மண்ணெண்ணை பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

இருபாலைப் பகுதியில்பதுக்கலில் ஈடுபட்ட பெரும்புள்ளி ஒருவரின் வீட்டிலிருந்து 25 பரல் மண்ணெண்ணை வரையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணை தற்போது அப்பகுதி சிற்றூர வையால் பொதுமக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. (லோ

# மரணச் சடங்குச் செலவு பெற திங்கள் செயலகம் வரவும்

யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதியில் 12 06.90 ஆம் திகதியின் பின் வான் செயலினால் இறந்தவர்களின் சார்பில் அவர்களது மரணச் சடங்குச் செலவுக்கு தமது விண்ணப்பங்களை 01. 01. 91 முதல் 18 01.91 வரை சமர்ப்பித்தவர்கள் தமக்குரிய 2000 ரூபா கொடுப்பனவை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை, மரண சாட்சிப் பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் புனர்வாழ்வுப் பகுதியில் கொடுப்பனவு கிளைக்கு எதிர் வரும் திங்கட் கிழமை 28 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நேரில் சமுகமளிக்குமாறு புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

எதிரிக்கு

று கொண்ட பல தாக்குதல்களுக்கு மக்கன்ரோ தலைமை வகித்துள்ளார்.

குறிப்பாக கனகராஜன் குளத்தில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதலிலும் சன்னாசிபரந்தனில் நடந்த தாக்குதலிலும் நெடுங்கேணியில் நடந்த தாக்குதலிலும் வேறும்பல இடங்களிலும் இந்தியப்படையினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை இவரது தலைமையில் எமது இயக்கம் கைப்பற்றியது.

அண்மையில் வவுனிப்பகுதி

# நிலைவரம் பற்றி ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று வளைகுடாயுத்த நிலைவரம்குறித்துவிசேடகூட்டத்தொடரில் ஆராயப்பட்டது. எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையினை அடுத்து இந்த விவாதம் மேற்கொள்ளப்பட்டதாக சபையின் சபாநாயகர் தெரிவித்தார்.

# மேலும் பல பொருள்களுக்கு வர்த்தகசங்கம் விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் அன்றாடத் தேவைகட்கு அவசியமான மேலும் பொருள்கள் சிலவற்றை யாழ் வர்த்தகர்கள் தெரிவு செய்து அவற்றிற்கான உயர் விற்பனை விலைகளையும் நேற்று மாலை முடிவுசெய்தார்கள் 20ஆம்திகதி வெளியிட்டஅவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அதே நிபந்தனைகள் இப்பண்டங்களின் விற்பனைக்கும் பொருத்தமாக இருக்கவேண்டுமென வர்த்தக சங்கம் முடிவு எடுத்துள்ளது பெரும்பாலும் இப்பண்டங்களின் விலைகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறு இன்றி இருப்பதைக் கவனத்தில் கொண்டே விலைகள் நிர்ணயிக்கப்பட்டதாகக் கருத்து வெளியிட்டார்கள். மேலும்

தெரிவித்தார்.

### பதுக்கலுக்கு எதிராக

பதுக்கல், விலைவாசி உயர்வு போன்றவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், மோசடி வர்த்தகரின் முகத்திரையைக் கிழிப்பதற்கும், விவசாய இடுபொருள்கள், கைத்தொழில் மூலப்பொருள்கள், எரிபொருள், மின்சாரம், போக்குவரத்து போன்றவற்றின் மீதான தடைகளை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தீவக மக்களின் போக்குவரத்துக்காக பண்ணைப்பாலத்தைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

மகஜரைப் பெற்றுக்கொண்ட யாழ் அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் மத்தியில் பேசும்போது அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் இம்மகஜரை உரிய இடத்துக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து யாழ். செயலகத்தின் முன்னால் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகள், கூட்டுறவுத் துறையினர், தொழிலாளர் பிரதிநிதிகள் போன்ற பல்வேறு தரப்பினரும் சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை மற்றும் பதுக்கல் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடவும் சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவும் முன்வரவேண்டும் என்றும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். (க)

...ரின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டதும் கொலப்போரில் ஆயுதங்களை பற்றியதான ஒரு முடிவுக்கு இரு தரப்பினரும் வரலாம் என்று பிரட்மன் வீரக்கோன் கூட்டமமாகத் தன்னிடம் தெரிவித்ததாகப் பேராசிரியர் சார்க் தெரிவித்தார்.

யாழ். பொதுசன நூல்நிலையத்தை அழித்தமை தமிழரின் பண்பாட்டுக் கோலத்தின் வேர்களை வேரோடு அழித்ததற்குச் சமமானதும். இந்தச் சம்பவமே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என்னை அக்கறை காட்ட வைத்தது. தமிழருக்கான சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். இலங்கையில் பௌத்தம் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் பீற்றர் சார்க் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவித்தார்.

பேராசிரியர் சார்க் இலங்கையில் பௌத்த மதம் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளமை பற்றியும் சமயத்துக்கும் பேரினவாதத்துக்கும் உள்ள தொடர்பை உள்ளடக்கிய கருத்துக்கள் அடங்கிய வெளியீடுகளை வெளியிட்டதற்காக, இலங்கை அரசு பேராசிரியர் இலங்கை வர நான்கு வருடங்களாக விசா வழங்க மறுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நோயாளர்

வைத்தியசாலைக்கு சமூகம் கொடுக்க வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளுடன் கூடச் செல்பவர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (86)

...இவரது தலைமையில் எமது இயக்கம் கைப்பற்றியது.

அண்மையில் வலிகாமம் பகுதிகள் பலவற்றில் சிறிலங்கா அரசபடைகள் மீது மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களுக்கு மக்கன்ரோ தலைமை வகித்தார்.

கொக்காவில், மாங்குளம் இராணுவமுகாம்களின் வெற்றிகளிலும் மக்கன்ரோவின் பங்களிப்பு முக்கியமானது என இச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொம்மருக்கும்

திலிருந்து யாழ். செயலகம் வரை பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களும் உட்பட கடற்றொழிலாளர் சங்கம், கூட்டுறவுச் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம், தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் ஆகியவை உட்பட தீவக மக்களும் பெருந்தொகையில் பங்குபற்றினர். பண்ணைப்பாலமும் உடனடியாக திருத்தப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பெரும் ஆர்ப்பாட்டகோஷங்களை எழுப்பினர். (வோ)

### இந்திய-இலங்கை

வுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் வி.சி சுக்லா மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

### வளைகுடா

வைக்கப்பட்டுள்ளது. இதில் வெற்றி பெறுபவர்கள் வளைகுடாவில் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் அவர்கள் விரும்பும் இடத்திற்கு அழைத்துச்செல்லப்படுவர் என அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

...கூறு இன்றி இருப்பதைக் கவனத்தில் கொண்டே விலைகள் நிர்ணயிக்கப்பட்டதாகக் கருத்து வெளியிட்டார்கள். மேலும் ஒரு தொகுதி பண்டங்களுக்கான விலைநிர்ணயம் விரைவில் வெளியிடப்படும் எனவும் வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதற்கமைய யாழ் மாவட்ட வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள மேலும் சில பொருள்களின் விலைப்பட்டியல் கீழ்வருமாறு:

| பொருள்கள் | குறித்த விலை | ஏற்றுக் கூலி | முடிவு விலை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|---|---|
| அரிசி | | | | | |
| வெள்ளைப்பச்சை | 14-50 | 10-90 | 24-50 | 27-00 | 29-00 |
| கோறா வெள்ளை | 15-00 | 10-00 | 25-00 | 27-00 | 29-50 |
| சம்பா | -- | -- | -- | 30-00 | 31-00 |
| லக்ஸ் | 05-50 | 01-50 | 07-00 | 08-00 | 09-00 |
| லைபோய் | 05-25 | 01-50 | 06-75 | 07-75 | 08-75 |
| றெக்சோனா | 04-80 | 01-50 | 06-30 | 07-30 | 08-30 |
| வண்டலைற்(சி) | 04-45 | 01-50 | 05-95 | 06-95 | 07-95 |
| லக்ரே ஜின் (பூஒறீம்) | 59-50 | 07-50 | 67-00 | 68-00 | 70 00 |
| நெஸ்ரோம்மால்ட் (ரின்) | 73-00 | 07-50 | 80-50 | 81-50 | 83-50 |
| செர்லக் | 63-00 | 07-50 | 70 50 | 71-50 | 73-50 |
| அங்கர் | 46-00 | 07-50 | 53-50 | 54-50 | 56-50 |
| ஒறீம்கிறேக்கர் | 19-50 | 05-00 | 24-50 | 25-50 | 27-50 |

## உதவி அரச அதிபர்கள் கிராமசேவகர் கலந்துரையாடல்

இந்நெருக்கடியான காலகட்டத்தில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளைத் திறம்படச் செய்வதற்கான நடைமுறைகள் பற்றிக் கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர்கள், கிராம சேவையாளர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் கலந்துரையாடல் நடைபெறவுள்ள இடங்களும், காலங்களும் கீழ்த் தரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய இடங்களில் 27.1 1991 ஞாயிறு பி.ப. 2 00 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய இடங்களில் 29.1.91 செவ்வாய் பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய இடங்களில் 31.1.91 வியாழன் பி.ப. 2 00 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையிலும், தெல்லிப்பளை, உடுவில் ஆகிய இடங்களில் 1.2.91 வெள்ளி பி.ப 2 00 மணிக்கு கன்னாகம் நகம்ஸ் படமாளிகையிலும் சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களில் 4 2 1991 திங்கள் பி.ப. 2.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் 5 2 1991 செவ்வாய் பி.ப. 2 00 மணிக்கு வேலணை மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது